# SUNDAY SCHOOL SYLLABUS

# TAMIL

# STANDARD 6

# 1997

**பொருளடக்கம்**


1. சாமுவேல் தாவீதை இராஜாவாக அபிஷேகம் பண்ணினது
2. தாவீதும் கோலியாத்தும்
3. தாவீதும் யோனத்தானும்
4. தாவீது சவுலைவிட்டு ஓடிப்போனது
5. நாபாலும் அபிகாயிலும்
6. சவுலின் மரணம்
7. தாவீது இராஜாவின் ஆளுகை
8. தாவீதுக்குப் பின் சாலொமோன் இராஜாவானது
9. சாலொமோனின் ஞானம்
10. சாலொமோன் கட்டின தேவாலயம்
11. யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்தது
12. இயேசு மல்குஸின் காதைத் தொட்டுச் சுகமாக்கியது
13. பேதுரு இயேசுவை மறுதலித்தது
14. இயேசு நியாயம் விசாரிக்கப்படுதல்
15. இயேசு சிலுவையில் அறையப்பட்டது
16. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின்-பரமேறுதலுக்கு முன் அவரைத் தரிசித்தவர்கள்
17. சந்தேகித்த அப்போஸ்தலன்

18. இயேசுகிறிஸ்துவின் பரமேறுதல்

19. புதிய ஏற்பாட்டுப் பஸ்காவாகிய கிறிஸ்து

20. அனனியாவும் சப்பீராளும்

## பாடம் 1

# சாமுவேல் தாவீதை இராஜாவாக அபிஷேகம்பண்ணினது

**I சாமு. 15:3, 9, 26, 35 ; 16:1-14, 18**

**பொருளடக்கம்:**

1. அமலேக்கியரை முற்றிலும் அழித்துப் போடும்படி தேவன் சவுலுக்குக் கட்டளையிட்டார். ஆனால் அவன் ஆகாக் இராஜாவையும், ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப்போட மனதில்லாமல் தப்ப வைத்தான். எனவே கர்த்தர் அவனை இராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார். கர்த்தருடைய ஆவியானவர் அவனை விட்டு நீங்கினார். (I சாமு. 15:3, 9, 26 ; 16:14).

2. சாமுவேல் சவுலுக்காகத் துக்கித்தான் (I சாமு. 15:35).

3. கர்த்தர் சாமுவேலிடம், ஈசாயின் குமாரரில் ஒருவனை இராஜாவாக அபிஷேகம்பண்ணும்படி கூறினார் (I சாமு. 16:1-3).

4. சாமுவேல் பெத்லகேமுக்குப் போய், ஈசாயையும் அவன் குமாரரையும் பலி விருந்துக்கு அழைத்தான் (I சாமு. 16:4, 5).

5. ஈசாயின் ஏழு குமாரர் சாமுவேலுக்கு முன்பாகக் கடந்து போனார்கள். ஆனால் கர்த்தர் அவர்களில் ஒருவனையும் தெரிந்து கொள்ளவில்லை (I சாமு. 16:6-10).

6. எல்லாருக்கும் இளையவனாகிய தாவீது கொண்டு வரப்பட்டு இராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டான் (I சாமு. 16:11-13).

7. தாவீதின் தோற்றமும் அவன் திறமைகளும் (I சாமு. 16:12, 18).

8. தாவீது இராஜாவாக அபிஷேகிக்கப்பட்ட போதிலும், சவுலின் மரணத்திற்குப் பின்னரே அவன் ராஜ்யபாரத்தைப் பெற்றுக்கொண்டான்.

**போதனை:**

தாவீது தன் குடும்பத்தில் இளையவனாயிருந்து, ஆடுகளை மேய்கிறவனாயிருந்தும், கர்த்தர் அவனை இராஜாவாகத் தெரிந்துகொண்டார். நாம் தாழ்ந்த நிலையிலிருந்தாலும் கர்த்தரால் நம்மை உயர்த்த முடியும்.

**மனப்பாடம்:** I சாமுவேல் 2:7, 8

------------------

## பாடம் 2

# தாவீதும் கோலியாத்தும்
**I சாமு. 17:1-54**

**பொருளடக்கம்:**

1. பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தத்திற்கு வந்தனர் (I சாமு. 17:1-3).

2. பெலிஸ்த வீரனான கோலியாத்து-அவனுடைய உருவமும் ஆயுதங்களும் (I சாமு. 17:4-7).

3. இஸ்ரவேலருக்கு விரோதமாக அவன் சவால் விடுத்து அவர்கள் சேனையை நிந்தித்தான் (I சாமு. 17:8-10).

4. சவுலும் இஸ்ரவேலர் அனைவரும் மிகவும் பயப்பட்டார்கள் (I சாமு. 17:11, 24).

5. பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தத்திற்குப் போயிருந்த, தாவீதின் மூன்று மூத்த சகோதரர்களின் சுகசெய்தியை விசாரித்து வரும்படி ஈசாய் தாவீதை அனுப்பினான் (I சாமு. 17:13-18).

6. தாவீது தன் சகோதரர்களுடன் பேசிக் கொண்டிருந்த போது, கோலியாத் வந்து, இஸ்ரவேலருக்கு விரோதமாக சவால் விடுத்தான் (I சாமு. 17:22, 23).

7. தாவீதின் வினவுதலும், இஸ்ரவேல் மனுஷருடன் அவனுடைய சம்பாஷணையும் (I சாமு. 17:25-27, 30).

8. தாவீதின் மூத்த சகோதரனாகிய எலியாபுக்கு அவன்மேல் வந்த கோபமும் தாவீதின் பதிலும் (I சாமு. 17:28, 29).

9. தாவீதின் வார்த்தைகள் சவுலின் செவிகளில் எட்டியது; சவுல் தாவீதை அழைப்பித்தான் (I சாமு. 17:31).

10. சவுலுக்கும் தாவீதுக்கும் இடையில் நடந்த சம்பாஷணையும் சவுல் தாவீதை கோலியாத்திற்கு விரோதமாய் அனுப்பியதும் (I சாமு. 17:32-37).

11. தாவீதின் போராயுதங்கள் (I சாமு. 17:40).

12. கோலியாத்திற்கும் தாவீதுக்கும் இடையில் நடந்த சம்பாஷணை (I சாமு. 17:43-47).

13. யுத்தமும் தாவீதின் ஜெயமும் (I சாமு. 17:48-54).

**போதனை:**

தாவீது கர்த்தருக்காக மிகுந்த வைராக்கியமுள்ளவனாயிருந்தான். அவனுக்குக் கர்த்தர்பேரில் பூரண விசுவாசம் இருந்தது. எனவே கர்த்தர் அவனோடிருந்து, அவனுடைய யுத்தத்தில் ஜெயங்கொடுத்தார். அதுபோலவே நாம் கர்த்தருக்கென்று வைராக்கியமுள்ளவர்களாயிருந்து, கர்த்தரை விசுவாசித்தால், அவர் நமக்கு எல்லாவற்றிலும் ஜெயம் தருவார்.

**மனப்பாடம்:** சங்கீதம் 18:17, 18

----------------

## பாடம் 3

## தாவீதும் யோனத்தானும்

**I சாமு. 18:1-9 ; 20:16-43 ; 23:15-18 ;**
**31:1, 2 ; II சாமு. 1:17-27**

**பொருளடக்கம்:**

1. சவுலின் மகனாகிய யோனத்தானின் ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது; இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டனர் (I சாமு. 18:1, 3).

2. சவுல் தாவீதைப் பகைத்தான் (I சாமு. 18:6-9).

3. தாவீது சவுலை விட்டு நாயோதிற்கு ஓடிப்போனபோது, அவனும் யோனத்தானும் மறுபடியும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர் (I சாமு. 20:16, 17).

4. சவுலின் மனப்பான்மையை தாவீதுக்குத் தெரிவிக்கும்படி யோனத்தான் திட்டம் பண்ணியிருந்த அடையாளங்கள் (I சாமு. 20:18-23).

5. அமாவாசி பண்டிகை-தாவீதின் இடம் காலியாயிருந்தது-சவுலின் கடுங்கோபம் (I சாமு. 20:24-33).

6. முன்பு திட்டம்பண்ணியிருந்தபடியே, யோனத்தான் சவுலின் மனப்பான்மையை தாவீதுக்கு அறிவித்தான். அவர்கள் ஒருவரையொருவர் முத்தஞ் செய்து பிரிந்தார்கள் (I சாமு. 20:35-43).

7. தாவீது சவுலை விட்டு ஓடிப்போய், சீப் வனாந்தரத்திலுள்ள ஒரு காட்டிலே வசித்தான். யோனத்தான் அங்கு போய், தாவீதைச் சந்தித்து, அவனைத் தைரியப்படுத்தினான் (I சாமு. 23:15-17).

8. அவர்கள் ஒருவரோடொருவர் இன்னொரு உடன்படிக்கை செய்து பிரிந்தனர் - தாவீது காட்டில் இருந்து விட்டான். யோனத்தான் தன் வீட்டிற்குப் போனான் (I சாமு. 23:18).

9. யோனத்தானின் மரணமும், தாவீதின் புலம்பலும் (I சாமு. 31:1, 2 ; II சாமு. 1:17-27).

**போதனை:**

யோனத்தான் தாவீதை நேசித்தபோதிலும், தன் சுகத்தை வெறுத்து தாவீதுடன் பாடுபடுவதைத் தெரிந்துகொள்ளவில்லை. நாம் இயேசுவையும் பரிசுத்தவான்களையும் நேசிப்பது மட்டுமல்ல, அவர்களோடு பாடுபடவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**மனப்பாடம்:** எபிரெயர் 11:24-26

-----------------

## பாடம் 4

## தாவீது சவுலைவிட்டு ஓடிப்போனது

**I சாமு. 16:23 ; 18:6-11 ; 19:18, 22-24 ; 23:25-28 ; 24:1-7 ; 26:1-12 ; 27:4**

**பொருளடக்கம்:**

1. தாவீது கோலியாத்தைக் கொன்றதும், சவுல் அவனைப் பகைத்ததும் (I சாமு. 18:6-9).

2. பொல்லாத ஆவி சவுலின்மீது வரும்போது, தாவீது அவனுக்கு முன்பாக சுரமண்டலம் வாசிப்பது வழக்கமாயிருந்தது. தாவீது இவ்விதம் சவுலுக்கு முன்பாக சுரமண்டலம் வாசித்துக் கொண்டிருந்தபோது சவுல் அவனை மூன்றுமுறை கொலை செய்ய முயற்சித்தான் (I சாமு. 16:23 ; 18:10, 11 ; 19:9, 10).

3. தாவீது ராமாவிலிருந்த சாமுவேலிடம் ஓடிப்போனான். பின்பு இருவரும் நாயோதிற்குப் போய் அங்கே தங்கினார்கள் (I சாமு. 19:18).

4. சவுல் நாயோதிற்கு தாவீதைப் பின்தொடர்ந்தான்; ஆனால் அவனால் அவனுக்கு ஒரு தீமையும் செய்ய முடியவில்லை (I சாமு. 19:22-24).

5. அநேக இடங்களுக்கு ஓடிப்போன பின்பு, தாவீது, மாகோன் வனாந்தரத்தில் தங்கினான். சவுலும் அவன் மனுஷரும், தாவீதையும் அவன் மனுஷரையும் வளைந்துகொண்டபோதும், சவுல் தாவீதுக்குத் தீமை செய்யாமல் நகரத்திற்குத் திரும்ப வேண்டியதாயிற்று (I சாமு. 23:25-28).

6. சவுலலைக் கொன்று போடும்படியாக தாவீதுக்கு இரண்டு முறை தருணம் கிடைத்தும், அவன் அவனைக் கொலை செய்யாமல் விட்டுவிட்டான் (I சாமு. 24:1-7 ; 26:1-12).

7. பின்பு தாவீது காத் பட்டணத்திற்கு ஓடிப்போனான். தாவீது காத்திற்குப் போனான் என சவுலுக்கு அறிவிக்கப்பட்ட போது, அதற்குப் பின் அவனைத் தேடவில்லை (I சாமு. 27:4).

**போதனை:**

தாவீதுக்குத் தருணங்கள் கிடைத்த போதிலும், தன்னைக் கொலை செய்யும்படி பின்தொடர்ந்த சவுலைக் கொன்றுபோடாமல், அவன் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவனாயிருந்ததால் அவனுடைய ஜீவனை விலையேறப்பெற்றதாகக்

கருதினான். அதுபோலவே நாமுங்கூட கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுக்கு விரோதமாகக் கிரியை செய்யக் கூடாது.

**மனப்படாம்:** லூக்கா 6:35

-------------------

**பாடம் 5**

## நாபாலும் அபிகாயிலும்

**I சாமு. 25:1-38**

**பொருளடக்கம்:**

1. தாவீது சவுலை விட்டு ஓடிப்போகும்போது, பாரான் வனாந்தரத்திற்கு வந்தான் (I சாமு. 25:1).

2. மாகோன் ஊரானாகிய நாபால் கர்மேலில் தன் ஆடுகளை மயிர் கத்தரித்துக்கொண்டிருந்தான் (I சாமு. 25:2).

3. நாபால், அவனுடைய மனைவியாகிய அபிகாயில் ஆகிய இருவரின் தன்மைகள் (I சாமு. 25:3).

4. தாவீது, நாபாலுடைய உதவியை நாடி, பத்து வாலிபரை அனுப்பினான் (I சாமு. 25:5-8).

5. நாபால் கொடுத்த பதிலும், தாவீது யுத்தத்திற்குப் புறப்பட்டதும் (I சாமு. 25:10-13).

6. அபிகாயில், தாவீதின் மனுஷரிடத்தில் தன் புருஷன் நடந்துகொண்ட விதத்தைப் பற்றிய செய்தியைக் கேள்விப்பட்டாள் (I சாமு. 25:14-17).

7. அவள் தாவீதுக்கு ஆகாரமாக சில பொருட்களை அனுப்பினாள் (I சாமு. 25:18, 19).

8. நாபாலுக்கு விரோதமாக தாவீதும் அவன் மனுஷரும் யுத்தத்திற்கு வந்துகொண்டிருந்தபோது, அவள் ஒரு கழுதையின் மேல் ஏறி வந்து தாவீதை வழியிலே சந்தித்து, அவனை சாந்தப்படுத்தினான் (I சாமு. 25:20-35).

9. நாபாலின் மரணம் (I சாமு. 25:36-38).

**போதனை:**

நாபாலின் கடுமையான வார்த்தைகள் தாவீதைக் கோபமூட்டின. ஆனால், அபிகாயில் தன் மெதுவான வார்த்தைகளால் தாவீதைச் சாந்தப்படுத்தி, தன் குடும்பத்தை அழிவிலிருந்து இரட்சித்தாள். நாம் மற்றவர்களுக்கு விரோதமாகக் கடுமையான வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது.

**மனப்பாடம்:** நீதிமொழிகள் 15:1, 2

-----------------

## பாடம் 6

# சவுலின் மரணம்

**I சாமு. 28:1-19 ; 31 ; II சாமு. 1**

**பொருளடக்கம்:**

1. பெலிஸ்தர் மறுபடியும் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தஞ்செய்ய வந்து, சூநேமிலே பாளயமிறங்கினார்கள் (I சாமு. 28:4).

2. சவுல் மிகவும் பயந்து, கர்த்தரிடத்தில் விசாரித்தான்; ஆனால் கர்த்தர் அவனுக்கு மறுஉத்தரவு அருளவில்லை (I சாமு. 28:5, 6).

3. சவுல் வேஷம் மாறி எந்தோரில் அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீயின் வீட்டிற்குப் போய், அவளிடம், முன்பே மரித்துப் போன சாமுவேலை எழும்பி வரும்படிச் செய்யச் சொன்னான் (I சாமு. 28:7-11).

4. சாமுவேல் எழும்பி வந்தபோது, சவுல் தான் செய்ய வேண்டியது என்ன என்று அவனிடம் கேட்டான் (I சாமு. 28:14, 15).

5. சாமுவேல் சவுலிடம் கர்த்தருடைய தண்டனையைப் பற்றியும், பெலிஸ்தரோடு செய்யப்போகும் யுத்தத்தின் முடிவைப் பற்றியும் கூறினான் (I சாமு. 28:16-19).

6. சவுலும் அவனுடைய குமாரரும் யுத்தத்தில் வெட்டப்பட்டு மரித்தார்கள் (I சாமு. 31:1-6 ; II சாமு. 1:6-10).

7. தாவீது சவுலின் மரணத்தைக் குறித்துத் துக்கித்தான் (II சாமு. 1:17, 19-24).

**போதனை:**

கர்த்தர் கட்டளையிட்டிருந்தும் சவுல் அமலேக்கியரை முழுவதும் அழிக்காதபடியால், அவன் ஒரு அமலேக்கியனின் கையினாலே மரிக்க வேண்டியதாயிற்று. நாமுங்கூட நம் ஜீவியத்தில் பாவத்தை முற்றிலும் அகற்றாதிருந்தால், அது முடிவில் நம்மை அழித்துப் போடும்.

**மனப்பாடம்:** எபிரெயர் 12:1; நீதிமொழிகள் 14:11

--------------------

## பாடம் 7

# தாவீது இராஜாவின் ஆளுகை

**II சாமு. 2:1-4 ; 5:1-10 ; 6 ; I நாளா. 28:2, 3, 6 ;**
**29:2-4, 6-9 ; II சாமு. 15:13, 14 ; 19:10 ;**

**24 ; ராஜா. 2:10, 11**

**பொருளடக்கம்:**

1. சவுலின் மரணத்திற்குப் பின்னர், யுதாவின் மனுஷர் தாவீதை எப்ரோனில் யூதா வம்சத்தாரின்மேல் இராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் (II சாமு. 2:3, 4).

2. இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் எப்ரோனுக்கு வந்து, தாவீதை இஸ்ரவேலின்மேல் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் (II சாமு. 5:1-3).

3. தாவீது எருசலேமுக்குப் போய் சீயோன் கோட்டையைப் பிடித்தான் (II சாமு. 5:6-9).

4. தாவீது உடன்படிக்கைப்பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவந்தான் (II சாமு. 6:1-3, 14, 15).

5. ஆலயத்தைக் கட்ட வேண்டுமென்ற தாவீதின் வாஞ்சையும், கர்த்தர் அவனுக்குக் கொடுத்த பதிலும். ஆலயம் கட்ட தாவீது பொருட்களைச் சவதரித்தது (I நாளா. 28:2, 3, 6 ; 29:2-9).

6. அவனுடைய குமாரனாகிய அப்சலோம் அவனுக்கு விரோதமாக எழும்பியபோது அவன் எருசலேமை விட்டு ஓடிப் போனான், ஆனால் தேவன் அவனோடுகூட இருந்து அவனைத் திரும்பி வரச் செய்தார் (II சாமு. 15:13-16 ; 19:10, 14, 15).

7. இஸ்ரவேலரையும், யூதா ஜனங்களையும் இலக்கம் பார்க்கும்படி சாத்தான் தாவீதின் இருதயத்தை ஏவினான். தாவீது அப்படிச் செய்தது, கர்த்தருக்குப் பிரியமில்லாதிருந்தது. தேவன் ஒரு கொள்ளைநோயை வரப்பண்ணினார்; அது எழுபதினாயிரம் பேரை அழித்துப் போட்டது (II சாமு. 24:1-16 ; I நாளா. 21:1).

8. தாவீதின் மனஸ்தாபமும், அவன் செலுத்திய பலியும் - வாதை நிறுத்தப்பட்டது (II சாமு. 24:17-25).

9. தாவீதின் மரணம் (I இராஜா. 2:10, 11).

**போதனை:**

தாவீது, தன் சொந்த பெலத்தில் சார்ந்துகொள்ளாமல் எப்போதும் தேவனை சார்ந்துகொண்ட ஒரு தாழ்மையான மனிதன். தேவசித்தம் செய்ய வாஞ்சிக்கும் ஒரு இருதயம் அவனுக்கு இருந்தது. அதைப்போல, நாமுங்கூட எல்லா சூழ்நிலைகளிலும் தேவசித்தம் செய்ய வாஞ்சிக்க வேண்டும்.

**மனப்பாடம்:** எபிரெயர் 10:5-7

-------------------

**பாடம் 8**

## தாவீதுக்குப் பின் சாலொமோன் இராஜாவானது

## I இராஜா. 1:5-50

**பொருளடக்கம்:**

1. தாவீதுக்கு அதிக வயதானபோது, அவனுடைய குமாரரில் ஒருவனாகிய அதோனியா, தான் இராஜாவாவதாகச் சொல்லி தன்னைத்தானே உயர்த்தினான் (I இராஜா. 1:1, 5).

2. அதோனியா ஒரு விருந்து செய்து, தன் சகோதரர் அனைவரையும் யூதா மனுஷரையும் அவ்விருந்திற்கு அழைத்தான். ஆனால் சாலொமோன் அழைக்கப்படவில்லை (I இராஜா. 1:9, 10).

3. தீர்க்கதரிசியாகிய நாத்தானின் ஆலோசனைப்படியே, பத்சேபாள், தாவீது இராஜா தனக்குப்பின் சாலொமோனை இராஜாவாக்குவதாகக் கொடுத்திருந்த வாக்கை அவனுக்கு நினைப்பூட்டினாள் (I இராஜா. 1:11-21).

4. தாவீது பத்சேபாளிடம் தான் கொடுத்திருந்த வாக்குறுதியை மறுபடியும் எடுத்துக் கூறினான் (I இராஜா. 1:28-30).

5. தாவீது கட்டளையிட்டபடியே, சாலொமோனை இராஜாவின் கோவேறு கழுதையின் மேல் ஏற்றி, அவனைக் கீகோனுக்கு நடத்திக் கொண்டு போனார்கள் (I இராஜா. 1:32-38).

6. ஆசாரியனாகிய சாதோக்கு சாலொமோனை கீகோனில் இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் இராஜாவாக அபிஷேகம் பண்ணினான் (I இராஜா. 1:33, 35, 39).

7. ஜனங்கள், நாகசுரங்களை ஊதி, மகா பூரிப்பாய்ச் சந்தோஷித்தார்கள் (I இராஜா. 1:40).

8. அதோனியாவும் அவனுடனிருந்த விருந்தாளிகளெல்லாரும் இதைக் குறித்துக் கேள்விப்பட்டு, ஓடிப்போய் விட்டார்கள் (I இராஜா. 1:49, 50).

**போதனை:**

தேவன் தம்முடைய திவ்விய திட்டத்தின்படி ஒரு வேலையை நிறைவேற்றும்படி ஒரு மனிதனைத் தெரிந்து கொள்ளும்போது, ஒருவராலும் அதை வியர்த்தமாக்க முடியாது.

**மனப்பாடம்:** ரோமர் 8:31

-------------------

### பாடம் 9

## சாலொமோனின் ஞானம்

### இராஜா. 3 ; 4:29-34 ; 10:1-7, 24

**பொருளடக்கம்:**

1. சாலொமோன் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய கட்டளைகளில் நடந்தான் (I இராஜா. 3:3).

2. அவன் கிபியோனில் செலுத்திய பலியும், அவன் கண்ட சொப்பனமும் (I இராஜா. 3:4, 5).

3. அவன் கர்த்தரிடம், ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமையின்னதென்று வகையறுக்கவும் ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டான் (I இராஜா. 3:6-9).

4. கர்த்தர் அவனுக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைக் கொடுத்து அவனை ஆசீர்வதித்தது மட்டுமல்லாமல், ஐசுவரியத்தையும் மகிமையையும் கொடுத்தார். அவன் அவருடைய கட்டளைகளையும் நியமங்களையும் கைக்கொண்டால் அவன் நாட்களை நீடிக்கப்பண்ணுவதாகவும் அவர் வாக்குக் கொடுத்தார் (I இராஜா. 3:10-14).

5. இரண்டு ஸ்திரீகளின் விஷயத்தில் சாலொமோன் கட்டளையிட்ட நியாயத்தீர்ப்பு (I இராஜா. 3:16-28).

6. மற்றெல்லா தேசங்களின் புத்திரரின் ஞானத்தைப் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது. சகல தேசங்களிலுமிருந்து ஜனங்கள் அவனுடைய ஞானத்தைக் கேட்கும்படி வந்தனர் (I இராஜா. 4:29-31, 34 ; 10:24).

7. அவன் நீதிமொழிகளையும் பாட்டுகளையும் இயற்றினான். பல தாவரங்களைக் குறித்தும், மிருகங்கள், பறவைகள், மச்சங்கள் ஆகியவற்றைக் குறித்தும் அவன் வாக்கியங்களைச் சொன்னான் (I இராஜா. 4:32, 33).

8. சேபாவின் இராஜஸ்திரீ சாலொமோனை விடுகதைகளினால் சோதிக்கும்படி வந்தாள் (I இராஜா. 10:1-3).

9. அவள் சாலொமோன் ஞானமுள்ளவன் என்பதை ஒப்புக்கொண்டாள் (I இராஜா. 10:6, 7).

**போதனை:**

நம்மை நாமே தாழ்த்தி, கர்த்தர் நம்மிடம் ஒப்புவித்திருக்கும் உத்தரவாதங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஞானத்தையும் உணர்வையும் அவரிடம் கேட்டால், அவர் நிச்சயமாகவே நம் வேண்டுதலை அருளிச் செய்து, தம்முடைய மகிமைக்கென்று ஆவிக்குரியதும் உலகப்பிரகாரமானதுமான சகல ஆசீர்வாதங்களாலும் நம்மை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாடம்:** யாக்கோபு 1:5, 6

------------------

## பாடம் 10

# சாலொமோன் கட்டின தேவாலயம்

**I இராஜா. 5:10, 17, 18 ; 6:2, 3, 7-9, 15, 19-23,**

**28-38 ; 8:6, 10, 11, 62, 63**

**பொருளடக்கம்:**

1. சாலொமோன், தேவாலயத்தைக் கட்டுவதற்காக மரங்களையும் கற்களையும் வெட்டி ஆயத்தப்படுத்தினான் (I இராஜா. 5:10, 17, 18).

2. ஆலயம், மண்டபம் இவற்றின் அளவுகள் (I இராஜா. 6:2, 3).

3. சாலொமோன் ஆலயத்தைப் பணி தீர்ந்து கொண்டு வரப்பட்ட கற்களாலே கட்டினான்; ஆலயத்தின் உட்புறத்தை மரவேலையாக்கி, பசும்பொன் தகட்டால் மூடினான் (I இராஜா. 6:7-9, 15, 21, 30).

4. சாலொமோன் ஒரு சந்நிதி ஸ்தானத்தை ஆயத்தப்படுத்தினான் (I இராஜா. 6:19, 20).

5. சந்நிதி ஸ்தானத்தில் இரு கேருபீன்கள் வைக்கப்பட்டன (I இராஜா. 6:23, 28).

6. ஆலயத்தின் சுவர்களையெல்லாம் அவன் சித்திர வேலைகளாக்கினான் (I இராஜா. 6:29).

7. அவன், சந்நிதி ஸ்தானத்தின் வாசலுக்கும், தேவாலயத்தின் வாசலுக்கும் சித்திர வேலைகளாலான கதவுகளைச் செய்தான் (I இராஜா. 6:31-35).

8. சாலொமோன் உட்பிராகாரத்தையும் கட்டினான் (I இராஜா. 6:36).

9. ஆலயத்தைக் கட்டி முடிக்க ஏழு வருடம் சென்றது (I இராஜா. 6:38).

10. உடன்படிக்கைப்பெட்டி சந்நிதி ஸ்தானமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்திலே ஆசாரியர்களால் கொண்டுவரப்பட்டது (I இராஜா. 8:6).

11. கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று (I இராஜா. 8:10, 11).

12. இராஜாவும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்தி, ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணினார்கள் (I இராஜா. 8:62, 63).

**போதனை:**

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்ற ஜனங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறார்கள். எனவே நாம் பரிசுத்தாவியைப் பெற்று, நம் ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டி எழுப்ப வேண்டும்.

**மனப்பாடம்:** I கொரிந்தியர் 3:16, 17

-----------------

**பாடம் 11**

## யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்தது

**யோவான் 12:4-6 ; லூக்கா 22:3-6, 21, 47, 48, 52-54 ; சக. 11:12 ; யோவான் 17:12 ; மத். 27:3-5**

**பொருளடக்கம்:**

1. யூதாஸ்காரியோத்து இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவன். அவன் திருடனும் பண ஆசைக்காரனுமாயிருந்தான் (யோவான் 12:4-6).

2. யூதாஸ்காரியோத்துக்குள் சாத்தான் புகுந்தான் (லூக்கா 22:3).

3. அவன் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத் தலைவர்களிடத்திலும் ஆலோசனைபண்ணி, இயேசுவைக் காட்டிக்கொடுப்பதாக வாக்குப்பண்ணினான் (லூக்கா 22:4-6).

4. இயேசு, அவன் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்பதை முன்னமே கூறினார்; யூதாஸைக் கேட்டின் மகன் என்று குறிப்பிட்டார் (லூக்கா 22:21 ; யோவான் 17:12).

5. அவன் இயேசுவைக் காட்டிக்கொடுப்பதைப் பற்றிய தீர்க்கதரிசனம் (சக. 11:12).

6. யூதாஸ் இயேசுவை முத்தத்தினால் காட்டிக் கொடுத்தான் (மாற்கு 14:44-46).

7. இயேசு யூதாஸிடம் கேட்ட கேள்வி (லூக்கா 22:47, 48).

8. இயேசு தம்மைப் பிடிக்கும்படி வந்த ஜனங்களிடம் பேசினார் (லூக்கா 22:52, 53).

9. அவர்கள் இயேசுவைப் பிடித்தார்கள் (லூக்கா 22:54).

10. யூதாஸின் தாமதமான மனஸ்தாபம் - அவன் நான்று கொண்டு செத்தான் (மத். 27:3-5).

**போதனை:**

யூதாஸ் முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுத்து, தன் ஊழியத்தையும் ஜீவனையும் இழந்தான். அதுபோல அழிந்துபோகிற பூமிக்குரிய பொருளுக்காக அழியாத பரலோகப் பொருளை நாம் இழந்துபோகக் கூடாது.

**மனப்பாடம்:** I தீமோத்தேயு 6:9, 10

--------------------

**பாடம் 12**

## இயேசு மல்குஸின் காதைத் தொட்டுச் சுகமாக்கியது

**யோவான் 18:1-11 ; லூக்கா 22:51 ; மத். 5:43-46 ; 26:52**

**பொருளடக்கம்:**

1. இயேசு தம் சீஷருடனே கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார். அங்கே ஒரு தோட்டம் இருந்தது (யோவான் 18:1).

2. இயேசு தம்முடைய சீஷருடனே அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால், யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான் (யோவான் 18:2).

3. யூதாஸ், போர்ச்சேவகரின் கூட்டத்தையும், பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு அங்கே வந்தான் (யோவான் 18:3).

4. இயேசுவுக்கும் அவ்வூழியக்காரருக்கும் இடையே நடந்த சம்பாஷணை (யோவான் 18:4-9).

5. பேதுரு தன் பட்டயத்தினால் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனாகிய மல்குஸை வலது காதற வெட்டினான் (யோவான் 18:10).

6. இயேசு பேதுருவிற்குக் கொடுத்த அறிவுரை (யோவான் 18:11 ; மத். 26:52).

7. இயேசு மல்குஸின் காதைத் தொட்டு அவனைச் சுகமாக்கினார் (லூக்கா 22:51).

8. சத்துருக்களை நேசிக்க வேண்டும் என்று இயேசு பிரசங்கித்திருந்தார் (மத். 5:43-46). இது, அவர் தாம் பிரசங்கம் பண்ணினதை நடைமுறையில் கொண்டு வந்தார் என்பதை நிரூபிக்கும் ஒரு சந்தர்ப்பமாகும்.

**போதனை:**

நாம் மற்றவர்களால் துன்பப்படுத்தப்படும்போது அல்லது பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்படும்போது, நாம் அவர்களுக்குத் தீமை செய்யக் கூடாது. இயேசு செய்தது போல அவர்களுக்கு நாம் நன்மை செய்து அவருடைய அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

**மனப்பாடம்:** மத்தேயு 5:44, 45

------------------

**பாடம் 13**

## பேதுரு இயேசுவை மறுதலித்தது

**மத். 26:30-35, 69-75 ; லூக்கா 22:31-33, 60-62**

**பொருளடக்கம்:**

1. இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப் போனபோது, இயேசு தமக்குச் சம்பவிக்கப் போகிறதைக் குறித்து அவர்களிடம் சம்பாஷித்தார் (மத். 26:30-32).

2. இயேசு பேதுருவை எச்சரித்தார் (லூக்கா 22:31, 32).

3. பேதுருவின் உறுதியான அறிக்கை (மத். 26:33 ; லூக்கா 22:33).

4. இயேசு அவனிடம், அவன் தம்மை மூன்றுதரம் மறுதலிக்கப் போவதாகக் கூறினார் (மத். 26:34).

5. பேதுரு, தான் அவரை ஒருபோதும் மறுதலிக்கப் போவதில்லை என்று அறிவித்தான் (மத். 26:35).

6. பேதுரு அரமனை முற்றத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் ஒரு வேலைக்காரியின் முன்பாக இயேசுவை மறுதலித்தான் (மத். 26:69, 70).

7. பேதுரு வாசல் மண்டபத்திற்குப் போனபோது வேறொருத்தியின் முன்பாக இயேசுவை மறுதலித்தான் (மத். 26:71, 72).

8. மூன்றாம் முறை மறுதலித்தது - சேவல் கூவினது (மத். 26:73, 74; லூக்கா 22:60).

9. இயேசு திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார் (லூக்கா 22:61).

10. இயேசு தன்னிடம் கூறிய வசனத்தைப் பேதுரு நினைவுகூர்ந்து, வெளியே போய் மனங்கசந்து அழுதான் (மத். 26:75; லூக்கா 22:61, 62).

**போதனை:**

நாம் நம்முடைய தீர்மானங்களை நமது சொந்த பெலனைச் சார்ந்து நிறைவேற்ற முடியாது. அதற்குத் தேவையானது தேவனுடைய கிருபையே. அந்தக் கிருபையை நாம் நம்மைத் தாழ்த்துவதாலும், கர்த்தருடைய சமுகத்தில் காத்திருப்பதாலும் பெற்றுக் கொள்ளலாம்.

**மனப்பாடம்:** யோவான் 15:5 ; பிலிப்பியர் 4:13

--------------

## பாடம் 14

## இயேசு நியாயம் விசாரிக்கப்படுதல்

**மத். 26:57-68 ; 27:1, 2, 11-31**

**பொருளடக்கம்:**

1. இயேசு முதலாவதாக பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்தில் அழைத்துக் கொண்டு போகப்பட்டார் (மத். 26:57).

2. இயேசுவுக்கு விரோதமான பொய்ச்சாட்சிகள் (மத். 26:59-61).

3. பிரதான ஆசாரியன் விசாரித்தபோது, அவர் மரணத்துக்குப் பாத்திரராயிருக்கிறார் என்று ஜனங்கள் கூறினார்கள் (மத். 26:62-66).

4. இயேசு பரிகசிக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டார் (மத். 26:67, 68).

5. விடியற்காலமானபோது இயேசு கட்டப்பட்டு, பிலாத்துவின் முன் கொண்டுபோகப்பட்டார் (மத். 27:1, 2).

6. 'நீ யூதருடைய ராஜாவா?' என்று கேட்ட பிலாத்துவின் கேள்விக்கு இயேசுவின் பதில் (மத். 27:11).

7. இயேசு பொய்யாகக் குற்றஞ்சாட்டப்பட்டபோது, அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை (மத். 27:12-14).

8. பிலாத்து ஜனங்களிடம், யாரை விடுதலையாக்க வேண்டும்? பரபாசையோ, இயேசுவையோ எனக் கேட்டான் (மத். 27:15-18).

9. பிலாத்துவின் மனைவி ஒரு சொப்பனங்கண்டு, அவனுக்குச் சொல்லி அனுப்பினாள் (மத். 27:19).

10. பரபாசை விடுதலையாக்க வேண்டும் என்றும் இயேசுவை சிலுவையில் அறைய வேண்டும் என்றும் ஜனங்கள் சத்தமிட்டார்கள் (மத். 27:20-23).

11. இயேசுவை சிலுவையில் அறைய மனதில்லாமல் பிலாத்து தன் கைகளைக் கழுவினான் (மத். 27:24).

12. ஜனங்களின் விருப்பத்திற்கிணங்கி பிலாத்து பரபாசை விடுதலையாக்கி, இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான் (மத். 27:24-26).

13. போர்ச்சேவகர் இயேசுவைப் பரியாசம்பண்ணி, துன்புறுத்தினார்கள் (மத். 27:27-31).

**போதனை:**
நமக்கு ஒரு மாதிரியைக் காண்பிக்கும்படியாக, இயேசு, உபத்திரவத்திற்கும் நிந்தைக்கும் தம்மை ஒப்புக்கொடுத்து அவற்றைப் பொறுமையுடன் சகித்தார். நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். எனவே நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும்.

**மனப்பாடம்: I** பேதுரு 2:20, 21

------------------

**பாடம் 15**

## இயேசு சிலுவையில் அறையப்பட்டது

**மத். 27:32-44, 46, 50-54, 60-66, லூக்கா23:27-46,**
**யோவான் 19:26-30, 38-42**

**பொருளடக்கம்:**

1. இயேசு சிலுவையிலறையப்படுவதாகக் கொண்டு போகப்பட்டபோது, சிரேனே ஊரானாகிய சீமோன் அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி பலவந்தம் பண்ணப்பட்டான் (மத். 27:32).

2. தமக்குப் பின்சென்ற திரள்கூட்டமான ஜனங்களிடத்திலும், ஸ்திரீகளிடத்திலும் இயேசு பேசினார் (லூக்கா 23:27-31).

3. அவர்கள் கொல்கொதாவிற்கு வந்தபோது, இயேசு சிலுவையிலறையப்பட்டார் (மத். 27:33-35).

4. ஒரு தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக, அவர்கள் சீட்டுப்போட்டு, அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டார்கள் (சங். 22:18; மத். 27:35).

5. அவருடைய வலது பக்கத்தில் ஒரு கள்ளனும், இடது பக்கத்தில் ஒருவனுமாக இரு கள்ளர்கள் சிலுவையிலறையப்பட்டனர். ஒரு கள்ளன் மனந்திரும்பினான்: மற்றவன் அவரை இகழ்ந்தான் (மத். 27:38; லூக்கா 23:39-43).

6. இயேசு பரிகசிக்கப்பட்டு, இகழப்பட்டார் (மத். 27:39-44; லூக்கா 23:35-39).

7. இயேசு சிலுவையில் உரைத்த ஏழு வார்த்தைகள்: (i) லூக்கா 23:34 (ii) லூக்கா 23:43 (iii) யோவான் 19:26,27 (iv) மத். 27:46 (v) யோவான் 19:28 (vi) யோவான் 19:30 (vii) லூக்கா 23:46.

8. இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார் (மத். 27:50; லூக்கா 23:46).

9. இயேசுவின் மரணத்தின்போது நடந்த சம்பவங்கள் (மத். 27:51,52).

10. நூற்றுக்கதிபதியும், அவனோடேகூட இருந்தவர்களும் இயேசு மெய்யாகவே தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்தனர் (மத். 27:54).

11. யோசேப்பும் நிக்கொதேமுவும் இயேசுவின் சரீரத்தை ஒரு புதிய கல்லறையிலே வைத்தார்கள் (யோவான் 19:38-42).

12. கல்லறை அடைக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு, காவல் பண்ணப்பட்டது (மத். 27 : 62-66).

**போதனை:**

இயேசு நமக்காக சிலுவையிலறையப்பட்டார். நம் சரீரத்தின் அவயவங்கள் இனி தங்கள் சுயசித்தத்தை நிறைவேற்றாதிருக்கும் பொருட்டாக, நாம் நம் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையிலறையப்படும் அனுபவத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்.

**மனப்பாடம்:** கலாத்தியர் 2:20 ; 5:24

--------------------

## பாடம் 16

## இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் பரமேறுதலுக்கு முன் அவரைத் தரிசித்தவர்கள்

இயேசு மரித்து மூன்றாவது நாளில் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவர்தம் உயிர்த்தெழுதலுக்குப் பின் பரமேறுதலுக்கு முன், வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல பின்வரும் சிலருக்குத் தரிசனமானார்:

1. மகதலேனா மரியாள் (மாற்கு 16:9-11 ; யோவான் 20:11-18).
2. மற்ற ஸ்திரீகள் (மத். 28:5-10).
3. பேதுரு (லூக்கா 24:34 ; 1 கொரி. 15:5).
4. எம்மா ஊருக்குப் போன இரண்டு சீஷர்கள் (மாற்கு 16:12, 13; லூக்கா 24:13-32, 35).
5. தோமா அங்கு இல்லாத வேளையில், பத்து சீஷர்கள் (யோவான் 20:19-24).
6. தோமா அங்கு இருந்தபோது, பதினொரு சீஷர்கள் (யோவான் 20:26-29).
7. ஏழு சீஷர்கள் (யோவான் 21:2-14).
8. கலிலேயாவிலே ஒரு மலையில் பதினொரு சீஷர்கள் (500 பேருக்கு அதிகமான கூட்டத்துடன் இருந்திருக்கலாம்) (மத். 28:16-20 ; I கொரி. 15:6).
9. யாக்கோபு (I கொரி. 15:7).
10. பதினொரு சீஷர்கள் (மாற்கு 16:14 ; லூக்கா 24: 33-51 : அப். 1:3-12).

**போதனை:**

இயேசு தம்மைப் பிரியப்படுத்தினவர்களுக்கும், பின்பற்றினவர்களுக்கும் தரிசனமானார். நாம் அவரைப் பிரியப்படுத்தி, அவரைப் பின்பற்றினால், அவர் மறுபடியும் வரும்போது அவரை முகமுகமாய்த் தரிசிப்போம்.

**மனப்பாடம்:** எபிரெயர் 12:14 ; I யோவான் 3:2

-------------------

**பாடம் 17**

## சந்தேகித்த அப்போஸ்தலன்

**யோவான் 11:16 : 14:4-6 : 20:24-29**

**பொருளடக்கம்:**

1. தோமா இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவன் (யோவான் 20:24).
2. அவன் இயேசுவை நேசித்தவனும், அவரோேடே மரிக்க ஆயத்தமாயிருந்தவனும் ஆவான் (யோவான் 11:16).

3. இயேசு சீஷர்களிடம், 'நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள். வழியையும் அறிந்திருக்கிறீர்கள்' என்று கூறியபோது, தோமா, 'ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம்' என்று கபடமில்லாமல் பதிலுரைத்தான். 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்' என்று கூறிய இயேசுவின் வார்த்தைகள் நித்தியமான சத்தியத்தை வெளிப்படுத்தியது (யோவான் 14:4-6).

4. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அநேகருக்குத் தரிசனமானார். மேலும் ஒரு சந்தர்ப்பத்தில், தோமா இல்லாத சமயத்தில் அவர் மற்ற எல்லா அப்போஸ்தலருக்கும் தரிசனமானார் (பாடம் 16) (யோவான் 20:19-25).

5. மற்ற அப்போஸ்தலர் தோமாவிடம் தாங்கள் இயேசுவைப் பார்த்ததாகக் கூறியபோது, அவன் பேசிய அவிசுவாசத்தின் வார்த்தைகள் (யோவான் 20:25).

6. இயேசு மறுபடியும், தோமா இருக்கையில் அப்போஸ்தலருக்கு வெளிப்பட்டது (யோவான் 20:26).

7. இயேசு தோமாவுக்குத் தம்முடைய காயங்களையும், ஆணிகளால் உண்டான தழும்புகளையும் காண்பித்து, 'அவிசுவாசியாயிராமல் , விசுவாசியாயிரு' என்று அறிவுறுத்தினார் (யோவான் 20:27).

8. தோமாவின் அறிக்கையும், இயேசு அதற்குக் கொடுத்த பதிலும் (யோவான் 20:28, 29).

**போதனை:**
உயிர்த்தெழுந்த இயேசுவை நாம் காணாதிருந்தும் விசுவாசிக்கக் கூடியவர்களாயிருப்பதால், அவரைக் கண்டு விசுவாசித்தவர்களைக் காட்டிலும், நாமே அதிக பாக்கியவான்களாயிருக்கிறோம்.

**மனப்பாடம்:** I பேதுரு 1:8, 9

---------------

**பாடம் 18**

## இயேசுகிறிஸ்துவின் பரமேறுதல்

**மத்.28:18-20 : மாற்கு 16:15-19:**
**லூக்கா 24:49-51 : அப். 1:2-11**

**பொருளடக்கம்:**

1. இயேசு தாம் உயிர்த்தெழுந்த பின்பு, தம் சீஷர்களுக்குத் தரிசனமானபோது கொடுத்த கட்டளை (மத். 28:18-20; மாற்கு 16:15).

2. பரிசுத்த ஆவியைக் குறித்து அவர் கொடுத்த வாக்குத்தத்தமும், கட்டளையும் (அப். 1:4, 5, 8; லூக்கா 24:49).

3. இயேசு அவர்களிடம், விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களைக் குறித்துச் சொன்னார் (மாற்கு 16:17, 18).

4. இயேசு தம்முடைய சீஷர்களை பெத்தானியா வரை அழைத்துக்கொண்டுபோய் தம் கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார் (லூக்கா 24:50).

5. அவர் அவர்களை ஆசீர்வதிக்கையில், பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஒரு மேகம் அவரை அவர்களுடைய கண்களுக்கு மறைவாக எடுத்துக்கொண்டது; அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் (லூக்கா 24:51 ; அப். 1:9; மாற்கு 16:19).

6. சீஷர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், வெண்மையான வஸ்திரந்தரித்த இரண்டு பேர் அவர்களருகே நின்று கூறிய வார்த்தைகள் (அப். 1:10, 11).

**போதனை:**

இயேசு உயிர்த்தெழுந்து மறுரூபமாக்கப்பட்ட சரீரத்தில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுபோல, நாமும் மறுரூபமடைந்து, கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதற்காக நம்மை நாமே ஆயத்தப்படுத்த வேண்டும்.

**மனப்பாடம்:** I தெசலோனிக்கேயர் 4:16, 17

--------------------

**பாடம் 19**

## புதிய ஏற்பாட்டுப் பஸ்காவாகிய கிறிஸ்து

**யோவான் 1:29 ; 6:55; I கொரி. 5:7,8 ; 11: 23-26**

**பொருளடக்கம்:**

1. எகிப்து தேசத்தில் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலருக்குப் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதால் விடுதலை கிடைத்தது.

2. புதிய ஏற்பாட்டுப் பஸ்கா-இயேசு (I கொரி. 5:7).

3. இயேசு உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29).

4. எகிப்தின் அடிமைத்தனம், ஒருவன் பாவத்தின் அடிமைத்தனத்திலிருப்பதைக் காட்டுகிறது.

5. ஒரு மனிதன் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமானால், அவன் முதலாவது இயேசுவை ருசிபார்க்க வேண்டும்.

6. அவன், துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்தமாவை இயேசுவிடம் அறிக்கையிடுவதன் மூலம் தன் ஜீவியத்திலிருந்து களைந்துபோட்டு, துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத ஜீவியத்தோடு இயேசுவைக் கிட்டிச் சேர வேண்டும் (I கொரி. 5:8).

7. இயேசுவின் மாம்சம் மெய்யான போஜனமும், அவருடைய இரத்தம் மெய்யான பானமுமாயிருக்கிறது (யோவான் 6:55).

8. இச்சத்தியத்தை வெளிப்படுத்தும்படியாகவே, கர்த்தருடைய பந்தி சபையில் ஆசரிக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டுள்ளது (I கொரி. 11:23-26).

**போதனை:**

நாம் இயேசுவின் மரணத்தை நினைவுகூர்ந்து, அவருடைய அன்பினால் நிறைந்து, அவருடைய வழிகளில் நடப்போமாயின், நாமுங்கூட உயிர்த்தெழுந்து, இயேசு மகிமையில் பிரவேசித்தது போல மகிமைக்குள் பிரவேசிப்போம்.

**மனப்பாடம்:** யோவான் 6:53, 54

---------------------

## பாடம் 20

## அனனியாவும் சப்பீராளும்

**அப். 2:42-45 : 32-35 : 5:1-11**

**பொருளடக்கம்:**

1. முதலாம் நூற்றாண்டில், விசுவாசிகள் சகலத்தையும் பொதுவாக வைத்து அனுபவித்தார்கள் (அப். 2:44, 45: 4:32).

2. அவர்களில் அநேகருக்கு நிலங்களும் வீடுகளும் சொந்தமாக இருந்தன. அவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாத்ததிலே வைத்தார்கள் (அப். 4:34, 35).

3. ஒவ்வொருவனுக்கும் அவனவனுக்குத் தேவைக்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது (அப். 4:35).

4. அனனியா சப்பீராள் - இவர்களது வஞ்சனையான செயல் (அப். 5:1, 2).

5. பேதுரு அனனியாவைக் கடிந்து கொண்டான் (அப். 5:3, 4).

6. அனனியாவின் மரணம் (அப். 5:5).

7. சப்பீராள் பேதுருவிடம் வந்தாள். அவளிடம் பேதுரு கேட்ட கேள்வியும் அவளைக் கடிந்து கொண்டதும் (அப். 5:7-9).

8. சப்பீராளின் மரணம் (அப். 5:10).

9. சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று (அப். 5:11).

**போதனை:**

நாம் தேவனுக்கும் பரிசுத்தவான்களுக்கும் முன்பாக எல்லாக் காரியங்களிலும் உண்மையுள்ளவர்களாயும், வஞ்சனையற்றவர்களாயும் இருக்க வேண்டும். அப்படியில்லாதிருந்தால் நமக்குப் பெரிய தீங்குகள் நேரிடும்.

**மனப்பாடம்:** நீதிமொழிகள் 28:13, 14

-----------